29-5-1986

# தடைப்பட்டிருந்த தபால்விநியோகம் மீண்டும்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 15 றம்ழான் 19 இதழ் 107

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29-5-1986

# இன்று ஆரம்பம்

## யாழ்.2-ம் குறுக்குத்தெருவில் தற்காலிக தபாலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தலைமைத் தபாலகம் இன்று முதல் தற்காலிகமாக யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத் தெருவில் பழைய தபாற்கந்தோர் கட்டிடத்தில் இயங்கும்.

ஆயினும் தபால் விநியோகம் மட்டுமே இதில் நடைபெறுமென்றும் பதிவுத் தபால், கடுகதித் தபால் என்பன முத்திரை ஒட்டிக் கொண்டு சென்றால் அவை ஏற்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மணியோடர், முத்திரை விற்பனை போன்ற பிறவேலைகள் எதுவும் இங்கு நடைபெறாதாம்.

யாழ். நகரத்திற்கும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் என வந்து சேர்ந்துள்ள 570-க்கு மேற்பட்ட தபால் பொதிகளைத் தரப்படுத்தித் தபால் விநியோகமும் இன்று நடைபெறும்.

யாழ். தலைமைத் தபாலகத்தில் உள்ள எந்த உபகரணங்களையும் எடுத்துக் கொள்வதற்கு இராணுவத் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எனவே, யாழ்ப்பாணத்தில் உள்ள உப தபால் கந்தோர்களில் மேலதிகமாக இருக்கும் உபகரணங்களைச் சேகரித்துத் தற்காலிக தபால் கந்தோரை இயக்குவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரி

(6ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னைக்கு இலங்கை அரசின் சமாதான முயற்சி;

# உள்நோக்கம் வெளிநாட்டுதவி!

## லண்டன் பத்திரிகையாளர் கருத்து

(லண்டன்)

"இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசு கடைப்பிடிக்கும் சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமானவையல்ல. அடுத்த மாதம் 1ம் திகதி பாரிஸில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது இந்த நாடுகளைச் சமாதானப்படுத்தி எவ்வளவு கூடிய அளவு உதவிகளைப் பெற முடியுமோ அவற்றைப் பெறுவதற்கான யுக்தியே இது".

இவ்வாறு ஜோன் எலியட் என்பவர் லண்டனில் வெளியாகும் பிரபல பத்திரிகை ஒன்றில் இலங்கை இனப் பிரச்னை குறித்து நன்கு ஆராய்ந்து எழுதியுள்ள விமர்சனத்தில் தெரிவித்துள்ளார்.

கனடா, சுவீடன், நோர்வே, இந்தியா போன்ற வழமையாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூடத் தற்போது இலங்கைக்கு உதவி வழங்குவது குறித்துச் சந்தேகப் படுவதாக அவர் தமது விமர்சனத்தில் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையேயான பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டதல்ல என்றும் கடந்த 2,500 வருடங்களாகவே இருந்து வரும் பிரச்னைகள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பி)

## ★ பாவம், அவர்கள் கனவுகள் கனவுகளே

## 27 தமிழ்ப் பெண்களை மேற்கு ஜெர்மன் திருப்பி அனுப்பியது

[கொழும்பு]

மேற்கு ஜெர்மனியில் உள்ள தங்கள் கணவன்மாருடனும், உறவினர்களுடனும் இணைந்து கொள்ளும் பொருட்டு இலங்கையிலிருந்து புறப்பட்டு அண்மையில் மேற்கு ஜெர்மன் சென்ற 27 தமிழ்ப் பெண்கள் ஜெர்மன் எல்லையில் வைத்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். போலந்து வழியாக மேற்கு ஜெர்மனிக்குள் செல்ல முற்பட்ட இப்பெண்கள், மேற்கு ஜெர்மன் எல்லையில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை இவர்கள் அனைவரும் பாதுகாப்பானமுறையில் இலங்கை வந்து சேர்ந்தார்களா என்பதை அறியும் பொருட்டு மேற்கு ஜெர்மன் எதிர்க் கட்சியான 'கிறீன் கட்சி'யின் இரு பிரதான உறுப்பினர்கள் மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்தனர்.

இப்பெண்கள் அனைவரும் பாதுகாப்பான முறையில் இலங்கை வந்தடைந்தமை குறித்தும், எவ்வித துன்புறுத்தல்களுக்கும் ஆளாகாமை குறித்தும் திருப்தியடைந்த இவ்விரு உறுப்பினர்களும் இன்று மீண்டும் மேற்கு ஜெர்மனி திரும்புகிறார்கள் [ய-பி]

## வெளிநாட்டுத் தூதர்களுக்கு அரசு நேரில் விளக்கும்

(கொழும்பு)

இனப்பிரச்னை குறித்து இங்குள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளிக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளவுள்ளது.

அடுத்த மாதம் பாரிஸில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாகவே அரசு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அரசின் இந்த திட்டத்திற்கிணங்க ஒவ்வொரு நாட்டின் தூதுவரும் தனிப்பட்ட முறையில் வெளிநாட்டமைச்சக அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு இனப்பிரச்னை பற்றிய விளக்கம் அளிக்கப்படுவார்கள் எனக்கூறப்படுகின்றது.

1987ம் ஆண்டு இலங்கைக்கு எவ்வளவு தொகை நிதி உதவி வழங்க வேண்டும் என்பதை இந்தப் பாரிஸ் மாநாடே தீர்மானிக்கவுள்ளமைகுறிப்பிடத்

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ போதைவஸ்து பாவித்த 5 இளைஞர்கள் யாழ். ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

திடீரென யாழ்ப்பாணத்தில் பரவியுள்ள போதை வஸ்து பாவனையில் இளைஞர்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர் எனத் தெரியவருகிறது

நேற்று முன்தினம் போதை வஸ்து பாவித்த 5 இளைஞர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போதை வஸ்து பாவனை திடீரென ஆரம்பித்துப் பரவியுள்ளதால் யாழ்ப்பாணத்தில் உள்ள பெற்றோர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

## வவனியாவில் குண்டு அதிர்ச்சி

[வவனியா]

வவனியாவில் நகரையே அதிரவைக்கும் வகையில் நேற்றிரவு 9 மணியளவில் பாரிய குண்டு வெடித்த சத்தம் கேட்டது.

குண்டு வெடித்ததினால் ஏற்பட்டுள்ள சேத விபரம் பற்றி எதுவும் அறிய முடியவில்லை.

## 'விரைவான தீர்வு வேண்டும்' —மக்கள் கட்சி

[கொழும்பு]

"இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்குக் காலதாமதமின்றி அரசு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்," என்று திரு டீ. பி. இலங்கரத்ன தலைமையிலான இலங்கை மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இலங்கையும், இந்தியாவும் ஏற்றுக் கொண்டுள்ள ஐக்கிய இலங்கை, ஒற்றையாட்சி, இன ஐக்கியம், அதிகாரப் பரவலாக்கல் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் இந்தப் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்றும் இக்கட்சி தெரிவித்துள்ளது. [ய-ரா]

## ஆயுதப் படையிடம் சிக்கிய வெளிநாட்டு நிருபர்கள்

(திருகோணமலை)

திருமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை நேற்று முன் தினம் பார்வையிடச் சென்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மூவரைக் கைது செய்த ஆயுதப் படையினர் 4 மணித்தியால விசாரணையின் பின்னர் விடுதலை செய்தனர்.

அண்மையில் சிங்களக் குடியேற்றக் கிராமங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களை நேரில் காண்பிப்பதற்கு இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த அழைப்பின் பேரில் பி.பி.ஸி. நிருபர் ஒருவரும் ஜெர்மன் பத்திரிகையைச் சேர்ந்த இரு நிருபர்களும் சென்றிருந்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இருகொலைகளும் கொள்ளையர் நாடகம்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை 4-ம் குறுக்குத்தெருவில் உள்ள கடையொன்றில் இடம்பெற்ற இருவர்த்தகர்கள் கொலைகளும் கொள்ளையர் செயல் என்று பொலிஸ் ஆணையாளர் திரு ஏ. எம். செனிவிரத்ன அறிவித்துள்ளார்.

இக்கொலைகள் சம்பந்தமாக இதுவரை பதினைந்து பேர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். [ய-ரா]

## திருமலையிலிருந்து அகதிகள் வருகை தொடர்கிறது

[வவனியா]

திருமலையிலிருந்து மேலும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக முல்லைத்தீவை நோக்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒருவாரத்துக்குள் திரியாயிலிருந்து 300 தமிழர்கள் குடும்பம் குடும்பமாகக் [illegible]

(6ம் பக்கம் பார்க்க)

## கடை எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் தேநீர்க்கடை

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ் [Standard Typewriter] தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு சிறிய திருத்தம் உண்டு Shanmuganathan, 43/3, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். (C 2564)

யாழ். மானிப்பாய் பிரதான வீதியில் புக்கைதிண்ணி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் தென்னை, மா, பலா ஆகிய பயிர்களைக் கொண்ட 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 139. கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். (C 2563]

(Vespa) வெஸ்பா-ஸ்கூட்டர் [4 சிறி] புதிய மிஷின் பூட்டப்பட்டுள்ளது. விற்பனைக்குண்டு. தொடர்பு: 15 ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். [C 2560]

National குளிர்சாதனப் பெட்டி 29x17x18 அங்குலம் புதியது ரூ 6000/-, தட்டச்சு Ramington - Table மொடல் ஆங்கிலம் ரூ 3,500/- விற்பனைக்குண்டு. விளம்பர இல C 2550 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 2550]

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகாமையில், காங்கேசன்துறை வீதியில் புதிய வீடு சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S மகாலிங்கம், இராமலிங்கம் வீதி, முடமாவடி, நல்லூர். (C2539)

## தேவை

யானைமார்க் குளிர்பான சோடா யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புபோய் ஏற்றி வர லொறிகள் வாடகைக்குத் தேவை. தொடர்பு: சிவா ஸ்ரோர்ஸ், 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். C-2558

## வகுப்புகள்

புதிய Spoken English பிரிவு வருகிற June 3ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகிறது. புதிய "TOEFL" வகுப்புக்களும் இம்மாதம் 30 ம் திகதி பகல் 11 மணிக்கும் 31ம் திகதி காலை 9 மணிக்கும் ஆரம்பமாகிறது. தொடர்பு: S B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (C 2548)

ரேடியோ and ரீ.வி (டெக்,) வெல்டிங், வீட்டு வயறிங், வாகனங்களுக்கான வயறிங், மோட்டார் மெக்கானிசம், நீர்க்குழாய்கள் பொருத்துதல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து டதியவகுப்புகள் 31- 05- 86, 01-06-86 இல் ஆரம்பமாகின்றன. முதலிற் சேருபவருக்குக் கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. VISPA ENGINEERING 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C2536]

## தவறிவிட்டது

இல. 532032385 பாலசந்திரன் பாலசிங்கம் 31 சிவப்பிரகாசம் றோட், யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டையும், கார் லைசன்சும் பேர்சுடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். C 2551

25-05-1986ந் திகதி ஞாயிறு மாலை 4 00 — 4 30 மணிக்கு இடையில் சுழிபுரத்துக்கும் சண்டிலிப்பாய் சீரணிச் சந்திக்கும், சித்தங்கேணிச் சந்திக்கும், பண்டத்தரிப்புச் சந்திக்கும் இடையில் தேசிய அடையாள அட்டை, பாஸ்போட் அளவிலான எட்டு போட்டோக்கள், முத்திரை அளவிலான போட்டோ, முக்கிய தஸ்தாவேஜுகளும் தவறியுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்க. தகுந்த சன்மானம் வழங்கப்படும். 'துர்க்கா கோல்ட் கவுஸ்', பிரதான வீதி, பண்டத்தரிப்பு. [C2538]

## நன்றி

9ஸ்ரீ 3781 இலக்கமுடைய எனதுகார் திருத்த வேலையின் போது இனந்தெரியாத நபர்களினால் எடுத்துச் செல்லப்பட்டது. மீட்டுத்தந்த தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

S.M. ஞானம்,
யாழ்ப்பாணம்.
[C2567]

## 3-வது வருட நினைவஞ்சலி



செல்வி இ. வரலட்சுமி

மலர்வு: 04-04-1958
உதிர்வு: 02-06-1983

அணையா ஜோதி அணைந்ததேனோ! எமது அருமை உத்தமியே உம் பிரிவால் நித்தமும் நாம் கலங்குகிறோம். உமது ஆத்மா சாந்தியும் பேரின்பமும் பெறுவதாக.

அன்புப்பெற்றோர்,
சகோதரர்கள்,
உறவினர்கள்.

தொல்புரம்,
சுழிபுரம். C 2549

## 31-ம் நாள் நினைவு அஞ்சலி

### நீயும் அவர்களும்

(கப்டன் லிங்கம்)

லிங்கா!
உன்னை ஏன்
பாடுகிறோம்?
உன் பிரிவை ஏன்
பாடுகிறோம்?
உன்னைப் போல்
ஆயிரம் இளைஞர்
இக்கணத்திலும்
இப்பூமியில் செத்துக்
கொண்டிருக்க
உன்னை ஏன்
பாடுகிறோம்?
தனித்தெடுத்து
உன் இழப்பை ஏன்
பாடுகிறோம் தெரியுமா?
உன் நிலை—
உன் அணி—

அவர்களிலிருந்து
வேறானது, தனியானது
அன்னை பூமியை
அந்நியரிடருந்து
மீட்டெடுக்கும் பணியில்
உன் அணி

அதற்கு உரமேற்றும்
மலைபோல் உன் நிலை
ஆனால் அவர்கள்—
அவர்களும் உன்னைப்
போலவே

புனித விடுதலை
நீராடவே வந்தனர்
ஆம் வந்தனர்
ஆனால் அவர்கள்
வந்த பணி
இடையில் விடுதலைக்கு
பிணியேற்றிற்று
அவர்கள் நின்ற நிலை

விடுதலையை
விலைகூறிற்று
ஆம் லிங்கன்
அவர்களைக் கண்டு
மக்கள் நடுங்கினர்
அவர்கள் முன் மக்கள்
வாய்பொத்திநின்றனர்
லிங்கன்
நாம் ஆயுதம் தரித்தது
மக்களை அடக்கவா?
அவர்களைச்
சுரண்டவா?

அவர்கள் அதைத்தான்
செய்தனர்
அதனால் விடுதலை
மீண்டும் மீண்டும்
மக்களை விட்டு
விலகிற்று
நின் அணி மீண்டும்
மீண்டும் அதை
மக்களில் நிறுத்த
ஓயாது முயன்றது
அப்போது—

அந்தப் பிணியுற்றோர்
உன்னைச் சுட்டனர்
அந்த நிலை தவறியோர்
உன்னைக் கொன்றனர்
விடுதலைப் பணியில்
பன்முக நிகழ்வுகளில்
ஓர் நிகழ்வாய்
உன்மரணம் எமக்கு
முகம் காட்டிற்று

ஆனால் நாம்
கலங்கவில்லை
காரணம்
நினது பலியில்
ஈழவிடுதலை

இன்னோர் பாய்ச்சல்
கண்டது
அதனால் உன்னைப்
பாடுகிறோம்
உன்னைத்
தனித்தெடுத்து

அமெரிக்க லிங்கனை
பாடிய விட்மன் போல்
உன்னை நாம்
பாடுகிறோம்
லிங்கம்
உன்னை நாம்
பாடுகிறோம்.

நண்பர்கள்.
(C2531)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் Dr. M.
தர்மகுலசிங்கம்

பூமிதனில் அன்புருவாய்
அவதரிப்பு:
22-03-1938

ஆளுகின்ற அரக்கரினால்
உயிர் பறிப்பு;
09-06-1985

திதி: 29-5-86

பன்னிரண்டு திங்கள்
தான் பறந்து
போச்சுதையா,
பக்கத்தில் நீரிருக்கும் பசும்
நினைவே தோன்று
தையா,
இன்னும் எத்தனையோ
திங்கள் பறந்தோடிப்
போனாலும்
எம் இதயக்கோயிலே
என்றும் நீர்
நிறைந்திருப்பீர்
பாவிகளின் கொடும்
செயலால் பரனடி தான்
சேர்ந்து விட்டீர்
பாதைதனைப்பார்த்து
நிதம் பரதவித்தே
வாடுகின்றோம்.
பாச ஒளியாய் நிறைந்து
இல்லம் சிறக்க
வைத்தீர் என்றும்
ஜீவ ஒளியாய் இருந்து
எங்களை நீர் காத்திடுவீர்

அனுதினமும் உங்கள்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.
கைலாயபிள்ளையார் வீதி,
நல்லூர். C 2513

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திரு. சபாபதிப்பிள்ளை
குமாரவேலு [JAMES]
(இளைப்பாறிய அதிபர்
B. A. BT. M. R.,
A. S. Lit. [Lond.])

அன்னையின் மடியில்:
20-05-1915

ஆண்டவன் அடியில்:
30-04-1986

குடும்பத்தின் ஒளிவிளக்காய், நாட்டின் நல்மகனாய் திகழ்ந்து திடீரென எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்த அன்புத்தெய்வம். சபாபதிப்பிள்ளை குமாரவேலு அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டோர்க்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்க்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு (30-05-86) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்மா ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்களின் பிரிவுத்துயரால் வாடும்:
மனைவி, மக்கள் [U K],
சகோதரர் கந்தசாமியும்
குடும்பமும், மருமகன்
கந்தவனமும் குடும்பமும்.

கல்லைவேம்படி,
சுளிபுரம். [C 2547]

## விசேட அறிவித்தல்

பாதுகாப்பும் அமைதியும் உள்ள சுழலுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய விலாசம்:

மு. தா. பொன்னம்பலம்

தரமான இலங்கை ஓடுகள் விற்பனையாளர்கள்
631, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு: மனோகரா தியேட்டர் சந்தியில் இருந்து 100 யார் தூரம்.

(A-692)

## விசேட அறிவித்தல்

பாதுகாப்பும் அமைதியுமான சூழலுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய விலாசம்:

வூட்ஸன்ஸ் தளபாட மாளிகை

631, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(தரமான தளபாடங்கள் சியெஸ்டா மெத்தைகள் வழங்குவோர்)

(A - 693)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

சுதந்திரத்தை அழித்துவிட்டு
அதனைத் தனக்குத்தானே
வைத்துக்கொள்ளவே கொடுங்கோலன்
சுதந்திரம் கோருகிறான்.

—ரவீந்திரநாத் தாகூர்.

# நமது நோக்கு

## யாழ். தபாலக ஊழியர் விடுத்துள்ள கோரிக்கை

இராணுவ முகாம் யாழ்ப்பாணம் கோட்டையில் அமைந்திருப்பதால் அதற்கருகிலுள்ள அரச நிறுவனங்களும், தனியார் தொழிலகங்களும் கடந்த பலநாட்களாக செயலிழந்துள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம் பிரதான தபாலகமும் அதனோடொட்டிய காரியாலயங்களும் கடந்த பத்துநாட்களுக்கு மேலாக செயற்படாமலிருப்பது பொதுமக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதான தபாலகம் கோட்டை முகாமுக்கு மிக அருகில் இருப்பது ஒருபுறமிருக்க கோட்டைப்பகுதியில் சிறு சம்பவம் நிகழ்ந்தாலும் முதலில் பதட்டத்திற்குள்ளாகக்கூடிய நிலையில் இக்கட்டிடம் அமைந்துள்ளது.

குண்டுவீச்சுக்கள் துப்பாக்கிப்பிரயோகங்கள், ஷெல் அடிகள் எதுவானாலும் இக்கட்டிடத்திலுள்ளவர்களை முதலில் நேரடியாகவே கலக்கிவிடுவது சகஜமாகி விட்டது. பெண்மணிகளும் இங்கு கணிசமான அளவில் பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

எனவே இங்கு பணிபுரியும் ஊழியர்கள், அச்சுற்றாடலிலுள்ள ஏனைய கட்டிடங்களில் பணிபுரிபவர்களும் கூட பணிக்குச் செல்ல தயக்கம் காட்டுவதில் நியாயமுண்டு.

தபாலகத்தில் பொதுமக்கள் தொடர்பான பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன இதனால் பொது மக்கள் தொடர்ச்சியாக அங்கு செல்லவேண்டிய நிலையும் இருக்கின்றது.

ஆனால் சமீபகாலமாக அடிக்கடி அப்பகுதியில் குண்டுவீச்சுக்கள் நடைபெற்று வருவதால் ஊழியர்கள் வேலைக்குச் செல்லமுடியாத நிலை ஒருபுறமும், வேலைகள் நடந்தாலும் பொதுமக்கள் அங்குசெல்ல முடியாத சூழ்நிலை மறுபுறமும் காணப்படுகின்றன.

ஆகவே நிலைமை சீராகும் வரை தபாலக வேலைகளை பாதுகாப்பான ஓர் இடத்துக்கு மாற்றித்தருமாறு அவர்கள் கோரியிருப்பதில் நியாயமுண்டு.

வேலைக்கு வாருங்கள் என அதிகாரிகள் பணிப்புரை வழங்குவது இலகுவாக இருக்கலாம். பாதுகாப்பான சூழ்நிலையில் வேலைகள் நடைபெற ஒழுங்குகளை செய்து கொடுப்பதும் அவர்கள் கடமையே!

தபாலகப்பகுதியில் குண்டுத்தாக்குதல் எதுவும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதாக வாக்குறுதியளித்தபோதிலும் மோதல்கள் இடம்பெறும் போது அப்பகுதி பாதுகாப்பாக இருக்கிறதெனக் கூறமுடியாது.

தபாலக ஊழியர்கள் எவரும் வேலைக்கு வரமுடியாதென அறிவிக்கவில்லை. வேலை செய்யவே அவர்கள் விரும்புகிறார்கள். அதற்கான பாதுகாப்புத் தேவையென்பதே அவர்கள் கோரிக்கை.

இந் நிலையில் தபால் ஊழியர்களின் கோரிக்கையை அதிகாரிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நாம் கருதுகின்றோம்.

ஊழியர்கள் மேலதிகாரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் கூறியிருப்பதுபோல நிலைமைகள் சீராகும் வரை தபாலகப் பணிகளைப்பாதுகாப்பான ஓர் இடத்தில் மேற்கொள்வதே நல்லது.

தபாலக ஊழியர்களுக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் அது உதவியாகவிருக்கும்.

## பத்திரிகையாளர்களை விடுவிக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

'ஈழநாடு' பத்திரிகை செய்தியாளர்கள் இருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பது தொடர்பாக வடபிரதேச தேசிய உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கு யாழ்.அரச அதிபர் ஊடாக மகஜரொன்றை அனுப்பியுள்ளது.

'இவர்கள் இருவரும் பாராளுமன்ற நிருபர்களாகவும், மேற்படி பத்திரிகையின் கொழும்பு பிரதிநிதிகளாகவும் நீண்டகாலம் சிறந்த பணியாற்றி வருபவர்கள் என்பதை நாம் அறிவோம்.

இவர்கள் அனுபவமிக்க பத்திரிகையாளர்கள் என்ற வகையில் நாட்டிற்கோ, நாட்டு மக்களிற்கோ எதிரான,விரோதமான எக்காரியங்களிலும் ஈடுபட்டிருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குஇருக்கின்றது.

இவர்கள் பலவருடகாலம் தேசிய பத்திரிகை சேவையில் ஈடுபட்டு வந்தவர்கள். ஜனநாயக பாரம்பரியத்தை வளர்க்க தமது எழுத்தின் மூலம் உதவியவர்கள். எனவே இவர்கள் மீதான விசாரணையை விரைந்து முடித்து இவர்களை விடுவிக்கத்தக்க நடவடிக்கைக்கு உத்தரவிடுவீர்கள் என நம்புகிறோம் என்று அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பின் நிகழ்வதை முன் உரைத்த முனிவர்

நமது நிலைவேறு. ஞானிகள் நிலைவேறு. ஞானிகள் முக்காலமும் உணர்ந்தவர்கள். பற்று அற்றவர்கள். பரமே பார்த்தவர்கள். இன்றும் என்றும் உள்ளவர்கள். விருப்பு வெறுப்பு அற்றவர்கள். எல்லாம் அறிந்தவர்கள். எல்லாம் வல்லவர்கள்.

ஞானிகள் திருவடிகளைத் தொழுதால், அவர்கள் அருட்பாடல்களை ஓதினால், அவர்கள் தரிசித்த புனித தலங்களைத் தரிசித்தால் நமது அல்லல்கள் வில்லங்கங்கள் தீரும் என்பது நம்பிக்கை.

சிறப்பிடம் பெறுவன.

ஒரு பொல்லாப்புமில்லை;
எப்பவோ முடிந்த காரியம்;
யாம் அறியோம்;
முழுவதும் உண்மை, ஆர் அறிவார்?

முதலியன இவற்றின் உண்மைப் பொருளை உட்பொருளை ஞானி ஒருவரே விளங்கவல்லார்; விளக்க வல்லார். இம் மகாவாக்கியங்கள் வேத உபநிடத வாக்கியங்களுக்கு இணையானவை. இவற்றை விரித்துரைப்பனவே நற்சிந்தனைப் பாடல்கள்.

சமய நிலையில் வாழ்பவர் ஈற்றில் இருவினையொப்புநிலை மயம் எல்லாம் சிவமயம். இங்கே சிவம் என்பது சகல சமயங்களையும் கடந்த சமரச சமயாதீத நிலையேயாகும்.

அத்தகைய அருபெரும் நிலையில் வாழ்ந்து அகில உலகில் பற்பல நாட்டார்க்கும் இனத்தார்க்கும் சமயத்தார்க்கும் வழிகாட்டியாக விளங்கிய யோக சுவாமிகள் நம்மவர்கட்காக நிறுவியதே சிவதொண்டன் நிலயம், பத்திரிகை முதலியன.

நமதுதுக்கம், துயரம், பயம் யாவும் நீங்கி நாம் நல்வாழ்வு

## இன்று சிவயோக சுவாமிகள் பிறந்ததினம்

இன்றைய சூழ்நிலையில் நாம் வழிபட்டு வழிகாட்டும் குருத்தவராக விளங்குபவர்களில் ஒருவர் ஈழத்தின் இணையற்ற குருத்தவருள் ஒருவராக விளங்கும் சிவயோக சுவாமிகளாவர். அவர்கள் அருளிய அருட்பாடல்கள் 'நற்சிந்தனை, என்னும் பெயரால் நூல் வடிவம் பெற்றுள்ளன. இவற்றுள் பல பாடல்களை மெய்யடியார்கள் நல்லூர் தேரடியில் தினமும் ஓதி வருகின்றார்கள் நாடெங்கும் நாவுள்ளோர் நாடோறும் பாடவேண்டிய பாடல்கள் நற்சிந்தனைப பாடல்கள்.

''பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி
—கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி'?

என்கின்றார் முக்காலமும் உணர்ந்த முனிவர் யோக சுவாமிகள். அவர் திருவாக்கில் இல்லாதது இல்லை.

கைவரப்பெற்றுச் சமயாதீத நிலையில் சீவன்முத்தராக சர்வானந்தராக - நித்தியானந்தராக - சிவமேயாக வாழ்வர், அவர்க்கு இன்பதுன்பமில்லை: பகல் இரவில்லை எங்கும் சிவ

வாழ நற்சிந்தனைப் பாடல்களும யோகசுவாமிகள் காட்டிய மார்க்கமும் அவர் தரித்த தலங்களும் என்றும் எமக்குத் துணைபுரிவன வாகும். ஒரு பொல்லாப்புமில்லை.

பருளாய்

### விநாயகன்

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி
-கிளியே
கவலையெல்லாம் போகுமெடி''

எனவும்,

அத்துதவி தப்பொருள் காப்பாம்-எனக்கு
அடியார்களென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம்
-என்றன்
சித்தத் திலங்குந் திருவருள்
-காப்பாம்

எனவும் பாடியுள்ளார்.

### சமயம் கடந்தவர்

ஞானிகள் சமயங்களைக் கடந்தவர்கள். சமயியாகவும் உள்ளவர்கள். உலகம் தத்துவ மயமானது. இறைவன் உலகமாகவும் உலகிற்கு அப்பால் தத்துவாதீதமாகவும் உள்ளவர். ஞானிகள் தத்துவாதீதமானவர்கள் அவர்கள் மானிடச் சட்டையில் வந்த இறைவரேயாவர். இந்த வகையில் ஈழநாட்டிற் சிறந்தவோ குருபரம்பரை நிலவி வருகின்றது. அந்த வரிசையில் வந்த யோக சுவாமிகளின் நேர்குருவாக விளங்கியவர் நல்லூர்ச் செல்லப்பாச் சுவாமிகள்.

நற்சிந்தனையிலே குருவும், நல்லூரும் சிறப்பிடம் பெறுவதற்குக் காரணம் நல்லூர் முருகன் தேரடியில் செல்லப்பாச் சுவாமிகள் யோகசுவாமிகளை ஆட்கொண்டமையே தத்துவாதீதநிலை காட்டியமையே.

குருவிடம் இவர் பெற்ற மகாவாக்கியங்கள் இன்று நாடெங்கும் ஞாலமெங்கும் பரவியுள்ளன. அவற்றுள்

## "வாசிப்புப்பழக்கத்தை அதிகரிக்க செய்யவேண்டும்"

[மாவிட்டபுரம்]

''பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்களை வாசிப்பதால் எமது மத்தியில் தெளிவு ஏற்பட்டு சரியான பாதையில் செல்ல வழி யேற்படுகின்றது. ஆகவே மக்களிடையேவாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கச்செய்ய வேண்டும். இதற்கு கிராமம் தோறும் சனசமூக நிலையங்களை அமைக்கவேண்டும்''.

இவ்வாறு மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய அம்பாள் சனசனமூகநிலையத்தைஅங்குரார்ப்பணம் செய்துவைத்துப்பேசிய மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் திரு ஆ.தேவதாசன் கூறினார் நிலைய வழிநடத்துநர் திரு. க. தங்கலிங்கம் இவ வைபவத்திற்கு தலைமைதாங்கி பேசுகையில்:- ''அறிவை விருத்தி செய்வதன் மூலம்தான் நாம் வாழ்க்கையில் முன்னேற முடியும். ஆகவே பல்துறை அறிவை நாம் விருத்தி செய்ய வேண்டும். அதற்கு சனசமூக நிலையங்கள் உதவவேண்டும்'' என்றார்.

திரு இ.வேலும்மயிலும்உட்பட பலர் பேசினர். நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

போஷகர்கள் திரு ஆ. தேவதாசன் (கடற்றொழில்பரிசோதகர்), திரு.சி.கணபதிப்பிள்ளை, திரு. சி. இராசதுரை, திரு. பி செல்வநாதர் (உபதபாலதிபர்) தலைவர் திரு. இ. வேலும் மயிலும், உபதலைவர்கள் திரு. மு இராமசாமி, திரு. கா. கைலைநாதன் இணைச்செயலாளர்கள திரு. செ. தனபாலசிங்கம், திரு. வே. தங்கவடிவேல், பொருளாளர் திரு. சி. மகேந்திரலிங்கம். 12பேர் கொண்ட நிர்வாகசபையும்தெரிவானது.

## "அரசின் கைக்கூலிகள் பற்றி விழிப்பாயிருப்போம்"

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

(யாழ்ப்பாணம்]

''பல்வேறு வழிகளில் ஈழப் போராளிகள் பற்றிய விபரங்களை அறியவும் ஈழத்தில் நடக்கும் செய்திகளை சேகரிக்கவும் சிறீலங்கா அரசின் கைக்கூலிகள் மக்கள் மத்தியில் ஊடுருவியுள்ளார்கள் இத்தேசத் துரோகிகள் மன்னிக்கப்படமுடியாதவர்கள். இவர்களை மன்னிப்பதென்பது பலநூறு போராளிகளின் இழப்பை உருவாக்கும். இவர்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி 'தேசத் துரோகிகளையிட்டு விழிப்பாயிருப்போம்'' எனத்தலைப்பிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது இவ்அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கடந்த வெள்ளிக்கிழமை திருமலையைச் சேர்ந்தஜோசப் பயஸ் என்ற தேசத்துரோகிக்கு நவாலியில்வைத்து மரணதண்டனை நிறை வேற்றப்பட்டது. இத்தேசத் துரோகி ஜெரி என்பவருடன் சேர்ந்து பலவிடுதலைப் போராளிகளையும், இயக்கங்களின் ஆதரவாளர்களையும் காட்டிக்கொடுத்தவர். யாழ்ப்பாணத்தில் இவர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது தனது தேசத்துரோக நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டார்''

(ஐ)

## இன்றுகூடி ஆராய்வர்

[யாழ்ப்பாணம்)

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுவிட்டதால் மேற்படி வித்தியலேயத்தில் கல்வி கற்று வந்த மாணவர்களதும், கற்பித்த ஆசிரியர்களதும் நிலைபற்றி ஆலோசிப்பதற்ககே மேற்படி கல்லூரியின் அபிவிருத்திச்சபையினரும் பழைய மாணவர்களும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் கூடிகிறார்கள்.

இக்கூட்டம் வயாவிளான் ம ம. வித்தியாலய அதிபர் திரு ஏன். கணேசபிள்ளை தலைமையிம் நடைபெறும். [ஐ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் செய்திகள்

## பிரதமர் தாட்சரின்

# மேற்காசிய அமைதி யோசனை

# வெறும் 'பாசாங்கு!'

டுனிஸ்ட் மே, 28.

''இஸ்ரேலியர்களின் கொள்கைகளை ஊக்குவிக்கவே பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட்தாட்சர், இஸ்ரேல் பயணம் மேற்கொண்டுள்ளார். மேற்காசிய அமைதியில்தாம் அக்கறை கொண்டுள்ளதாக அவர்கூறிக்கொள்வது வெறும் பாசாங்காகும்'' என்று பாலஸ்தீன பிரதிநிதி ஒருவர் திருமதி மார்கிரெட் தாட்சரின் வெளிநாட்டு விஜயம்குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

திருமதி தாட்சர் அண்மையில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருந்தார். பாலஸ்தீன விடுதலை இயக்கம் வன்முறைகளைக் கைவிட்டு இஸ்ரேலுடன் சமாதானமுயற்சிகளை மேற்கொள்வதன் மூலமே மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்றூர்.

திருமதி தாட்சரின் இக் கருத்துக்குறித்து அபிப்பிராயம் வெளியிட்டபோதே பாலஸ்தீன பிரதிநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''பாலஸ்தீனர்களிடம் ஆயுதப்போராட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டதன் மூலம் திருமதி தாட்சர் இஸ்ரேல்மீதான தமது ஆதரவை வெளிப்படையாகக் காண்பித்துள்ளார். கூடவே ஜோர்தானின் மேற்குக்கரையோரம் காஸாப்பிரதேசம் ஆகியவற்றில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்'' எனவும் அப்பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார். (கி)

## குராணுவிடம் ஊழல் பட்டியல் கையளிப்பு

(சென்னை)

தமிழக முன்னுள் அமைச்சரும் நமது கழகம் கட்சியின் தலைவருமான திரு. எஸ். டி. சோமசுந்தரம் தமிழக முதலமைச்சரதும் அவரது மந்திரி சபை உறுப்பினர்களுக்குமான நூறு ஊழல் குற்றச்சாட்டுகள் அடங்கிய மகஜரை தமிழக கவர்னர் திரு எஸ். குராணுவிடம் கையளித்துள்ளார்.

இம்மகஜர் கையளிக்கும் வைபவம் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் சோமசுந்தரமும் கவர்னர் மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்று கையளித்தனர்.

ஊர்வலத்தில் இந்திராகாங்கிரஸ் தி. மு. க. கட்சிகளின் தொண்டர்களும் கலந்து கொண்டனர். (கெ)

## சிறைக்கைதி 'ஹெலி'யில் தப்பியோட்டம்!

பாரிஸ், மே 27,

பாரிசுக்கு அருகிலுள்ள 100 வருடங்கள் பழமையான சிறைக் கூடமொன்றிலிருந்து துணிகரமான முறையில் ஹெலிகாப்டர் மூலமாக கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. மிஷால் வூஷா (வயது 34) என்ற கைதியே தப்பிச் சென்றவராவார். இவர் 18 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார்.

இக் கைதியின் சிறைக்கூடம் மேலாக ஹெலிகொப்டர் ஒன்று தாழப்பறந்து வந்தது. இதனை 30 வயது மதிக்கத்தக்க மெலிவான மண்ணிற தலைமயிரையுடைய ஒரு பெண்மணியே செலுத்திவந்தார்.

இப் பெண்ணுடன் ஒரு துப்பாக்கி மனிதரும் அந்த ஹெலிகொப்டரில் வந்திருந்தார்.

இவர்கள் வந்த ஹெலிகொப்டர் அந்தச்சிறைக்கூடத்தின் கூரை மீது தாழப்பதியவே கூரை மீது நின்றிருந்த மேற்படி கைதி கயிற்றின் மூலமாக ஹெலிகொப்டரினுள் ஏறிக்கொண்டார்.

மிஷால் வூஷா என்ற அக் கைதியுடன் அவரது சகா ஒருவரும் அக்கூரைமீது தப்பிச் செல்லுவதற்கு ஆயத்தமாக நின்றூர். ஆயினும் அவரை மீட்பதில் சிக்கல்கள் ஏற்படவே அந்த ஹெலிகொப்டர் அவரைக் கைவிட்டுச் சென்றதாகக் கூறப்பட்டது. சுமார் 5 நிமிட நேரமே இந்த தப்பிச் செல்லும் நடவடிக்கை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து அந்த ஹெலிகொப்டர் விளையாட்டு மைதானமொன்றில் இறங்கவே அதிலிருந்த மூவரும் காரொன்றில் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. பாரிஸ் விமான நிலையத்திலிருந்தே அந்த ஹெலிகொப்டர், பெண் ஒருவரால் வாடகைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சிறையிலிருந்து தப்பிச் சென்ற மிஷால் வூஷா என்ற அக்கைதி இத்துடன் 3வது தடவையாக சிறை உடைப்பில் இறங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## 300 குறுநாவல்கள்

(பீக்கிங்)

சீனாவின் சமீபகால இலக்கிய வளர்ச்சியில் குறுநாவல்கள் நிலையான இடத்தைப் பெற்றுள்ளன. சுமார் நாற்பதுபக்கத்துள் சுவையானகுறுநாவலை சீன எழுத்தாளர்கள் படைத்துவருகின்றனர். இப்போது நாவல்களின் இளைய தலைமுறையினரின் மனதுணிச்சலையே இத்தகவல்கள் பிரதிபலிக்கின்றன. ஓர் ஆண்டுக்கு சீனாவில் 300 குறுநாவல்கள் வெளியாகின்றன.

## மண்ணெண்ணை தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் மண்ணெண்ணைக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு நீர் பாய்ச்சமுடியாது பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

தற்போது சில கடைகளில் மண்ணெண்ணை லீற்றர் 17 ரூபாவாக விற்கப்படுகின்றது.

## பாடசாலைப் புத்தகங்கள்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி பாடசாலை பிள்ளைகட்கு வழங்குவதற்கென கொழும்பிலிருந்து எண்ணாயிரம் பாடசாலைப்புத்தகங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதென கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப் பாடசாலைப் புத்தகங்கள் விரைவில் பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே முதலாம் தவணை ஆரம்பத்தில் ஒரு தொகைப் புத்தகங்கள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு கிளிநொச்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

மாதம் வைகாசி
திகதி 15 (1986-5-29)
கிழமைவியாழன்
திதி: ஷஷ்டி பி.ப வரை
நக்ஷத்திரம்: திருவோணம் காலை 9-14 இன் மேல் அவிட்டம்

மேடம்:- மதிவழி நடப்பின் மற்றவர்கள் பொருமைப்படுமளவிற்கு முன்னேற்றமுண்டு அன்னையின் ஆதரவும் உண்டு.

இடபம்:- வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பறும். புத்திரர்களால பெருமகிழ்ச்சிக்கு இடம் உண்டு உள்ளத்தில் உவகை துள்ளும்.

மிதுனம்;- எக்காரியத்திலும் கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது, உதவி செய்யப்போய் குறைகேட்க நேரிடலாம். உடல் நலத்தைப் பேணவும்.

கடகம்:- தாம்பத்ய வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். களஸ்திர வழியால் பொருள் வரவுமுண்டு,

சிங்கம்;- சிறு விடயங்களுக்குக் கூட அதிக ஆத்திரப்படுவீர்கள். வீணை சந்தேகங்களும் தோனறக்கூடும். சிந்தித்து செயற்படவும்.

கன்னி:- மனம்போல் யாவும் நடக்கும். கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளாகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பிதாவழிச் சுகக் குறைவும் உண்டு.

துலாம்:- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்துக்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவியில் உயர்வு கிடைக்கும்.

விருச்சிகம்;- பொருள் வரவு உபசாரம் பொழுது போக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

தனுசு:- வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். வீணைன் சிந்தனையால் வேதனைப் படுவீர்கள் சிலருக்கு உடல் நல

[5-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### புத்தகமும் பருவ இதழ்களும் கட்டுதல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் புத்தகங்களும் பருவ இதழ்களும் கட்டுவதற்கு அனுபவமுள்ளவரிடம் இருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. புத்தகத்தின் மொத்தம் ¼ அங்குலத்தில் இருந்து 3½ அங்குலம் வரை இருக்கும். அதன் நீள அகலம் பின்வருவாறு!

[1] 7'' x 5'' [2] 7''x6''
[3] 9''x6'' [4] 9''x7''
[5] 10'' x 6'' [6] 11''x9''

1. புத்தகம் முழுமையான ரெக்சின் சீலை கட்டாகவும்.

2 புத்தகத்தின் தலைப்பிலும் முதுகுப்புறத்திலும் எழுத்துக்கள் பொன் முலாம் மூலம் பொறிக்கப்பட்ட வேண்டும்.

3 புத்தக உறை (இரண்டு ரூத்தல்) தடித்த மட்டையில் அமைதல் வேண்டும்.

4. மேலதிக விபரங்களுக்கு நிதியாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

மேற்படி பொறியிடப்பட்ட கூறுவிலைகள் எதிர்வரும் ஆனி மாதம் 9-ம் திகதி காலை 10 மணிக்கு முன்னர் நிதியாளருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்க வேண்டும்.

கூறுவிலைகள் திறக்கப்படும் நேரம்: 09 - 06 - 1986 பிற்பகல் 2 மணியாகும்.

விண்ணப்ப கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் UJ / S'K/ 06/09/06/86 என எழுதப்படடல் வேண்டும்.

பதிவாளர்.
(A-694)


பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ✶ ஜேர்மனி ✶ பிரான்ஸ்
★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
அத்துடன்
டென்மார்க் செல்பவர்களுக்கு
இலவசமாக பொன்ட்
செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்!

INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

குறிப்பு: எமது முகவர் ஜூன் 1ந் திகதி டென்மார்க் அழைத்துச் செல்வார்.
A706





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31-வது நாள் நினைவஞ்சலி



திரு.
மோசேஸ் டானியல்

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர், நவாலிஆனைக்கோட்டை)

தோற்றம்: 24-2-1907
மறைவு: 29-4-1986

தந்தையாக உமைப்
பெறவே தவம்
செய்தோம்
நாம் என்றே
தரணியிலே
பலர் சொல்லத்
தலை நிமிர்ந்தோம்
உம்பெயரால்
அன்பினிலே கனிந்த
மக்கள்
அரங்கினிலே உயர்ந்த
மக்கள்
அப்பாவின் அருந்
துணையோ
தப்பாது எமக்கென்று
எப்போதும் நினைவு
கொண்டு
இறுமாப்பு எய்தி
நின்றோம்
இப்போது தனித்து
நின்று
உலகெல்லாம்
தேடுகின்றோம்
உன்முகத்தைக்
காணவில்லை
ஓவியந்தான்
காணுகின்றோம்
அம்மாவின் பாசத்தால்
அருமை மைந்தன்
நேசத்தால்
ஆண்டவன் சந்நிதியில்
அமைதி பெறச்
சென்றீரோ.

எமது துயரில் பங்கு கொண்டு அன்றைது மரணச் சடங்குகளிற் பங்குபற்றியோருக்கும் அனுதாபத் தந்திகள், மலர் வளையங்கள் அனுப்பியோருக்கும் எம் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல 7, ஒடக்கரைவீதி,
யாழ்ப்பாணம்.
[C2557]

## இளைஞர் பலி

[மட்டக்களப்பு]

செங்கலடி-ஏறுவூர் வீதியில் சென்ற ஆயுதபடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் பலியானார்.

பலியான இளைஞர் சடலத்தைப் படையினர் முகாமிற்கு எடுத்துச் சென்றனர், [மா]

## யாருடையது?

வண்ணார்பண்ணை காரைக்காடு ஒழுங்கையைச் சேர்ந்த திரு. ந கதிரவேலு என்பவர் யாழ். மின்சாரநிலைய வீதியில மருந்துக்குளிசைகள் கொண்ட ஒரு பொலித்தீன் பையைக் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் ராஜேந்திரா
சிவஜீவன் (பபா)

படைப்பு: 13-09-1968
அழிப்பு: 29-05-1985

விளக்குகள் அணைந்த
இருண்ட வீதியில்
ஒழியேற்றப் புறப்பட்ட
சிவஜீவா
பிஞ்சுவயதினிலே
ஆற்றல் மிகக்
கொண்டு
வெஞ்சமராடப்
புறப்பட்ட
வீரப் புதல்வா...
பாதி வழியினிலே
பாதகரால் கொலை
யுண்டாலும்
நீதி நிலைக்கும்வரை
நின் பணிகள்
தொடரும்
ஆற்றல்மிகு கரங்களிலே
ஆயுதங்கள் தாங்கி
மாற்றம் ஒன்று
படைக்கும்வரை
மனதில் உன்நினைவு
மங்காது.

நித்தம் உன் பிரிவால்
கலங்கி துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணு, தங்கை,
உற்றூர், உறவினர்,
தோழர்கள்.
(C 2553)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உயர் திரு.வே.சி.நடராசா
தோற்றம்: 10-03-1921
மறைவு: 08-06-1985
திதி: 29-05-1986

எமது குடும்ப ஒளிவிளக்காய் இதுவரை காலமும் ஒளி வீசிவிட்டு வாழ்வு ஓர் பொய்மைக் கனவு என்று நாங்கள் எல்லோரும் நினைக்கும் விதத்தில் திடீரென எம்மைவிட்டு பிரிந்து இறைவன் பாதம் சென்றுவிட்டீர்கள் ஐயா! உங்களை எங்களிடமிருந்து இறைவன் பிரித்துவிட்டு ஆண்டொன்று கடந்தாலும் நீங்கள் எங்களுடன் தான் இருக்கின்றீர்கள் என்ற சிந்தனையில்தான் கடந்த நாட்கள் மாதங்களாகி வருடமொன்ருகி வருகிறபொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் ஐயா.

உங்கள்சிந்தனையில்உயிர் வாழும்:
அன்பு மனைவி, மகன்,
மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
26, திருநெல்வேலி
[சிவன்] புதுவீதி,
யாழ்ப்பாணம். [C2472]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



M. R. மணிவண்ணன்

மலர்வு: 1962-03-11
உதிர்வு: 1984-05-29

அன்புருவே மணிவண்ணு
ஈராண்டாக
அனல்மெழுகாய்
உருகிமனம் கரை
கின்றோம் நாம்
என்புடலை மறைத்திட்
டாய் ஆனல் எங்கள்
இதயத்தின் கோவி
லிலே என்றும்வாழ்வாய்
பொன்சொரியும்
வதனமலர் இன்சொல்
பூத்துப்
பொழிகின்ற புன்சிரிப்பும்
மறப்போமோ நாம்
இன்னுயிரே இறைவனிணை
மலர்த்தாள் மீது
ஈடரிய பேரின்ப
சுகத்தில் வாழ்க.

உன்பிரிவால் துயருறும்:
அம்மா, தம்பி,
உறவினர், நண்பர்கள்.
C 2502

## கருத்துரை நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

இரமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத தலைவர் ஸ்ரீமத் சுவாமி சித்ருபானந்தாவும், ராமகிருஷ்ணலைய அமை பளர் திரு இரா மகந்திரசிங்கமும் எதிர்வரும் ஜூன் மாதம் 6ம் திகதி காலை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கருத்துரை நிகழ்ச்சியொன்றினை நடாத்துவார்கள்.

### இன்றைய பலன்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மும் பாதிக்கப்படலாம்.

மகரம்:- மனப்போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கும். உடல் நலமும் குன்றும்.

கும்பம்:- அதிகாரட்பேறும் அதிக பொருள் வரவுமுண்டு ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள். குடும்ப வழிச்சுகமுமுண்டு.

மீனம்:- தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால நிகழ்ச்சிகள் அலைமோதும் சகோதரவழி சஞ்சலமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்


**வெலிங்டன**

10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர்
நடித்த
**விதி**
(கலர் - புதிய பிரதி)

**லிடோ**

தினசரி காலை 10-30, 2-30
மாலை 6-30
முத்துராமன். சுஜாதா
நடித்த
**மயங்குகிறுள் ஒரு மாது**
[புதியபிரதி-கலர்]

**லிபேட்டி சினிமாவில்**

வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்
துப்பாச்கிவீரன்
James Coburn
கவர்ச்சி அழகி
Sophia Lorene
நீக்ரோ அழகன்
Jim Brown நடித்த
FIRE POWER
5 பதக்கங்கள் பெற்ற மாபெரும் வெளியீடு.
10-00, 2-15, 4-15, 6-30
வயது வந்தவர் களுக்கு மட்டும்


## விடுதலை இயக்கங்களுக்கு ஓர் விண்ணப்பம்

74/1, கஸ்தூரியார் வீதியில் இருக்கும் நியூ லலிதா யுவலர்ஸ் நகைக் கடையில் 1-2-86ல் இனந் தெரியாத ஆயுதம் தாங்கிய ஒரு கோஷ்டியினரால் எமது ஸ்தாபனம் கொள்ளையடிக்கப்பட்டது. அப்பொருட்களைத் திருப்பித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை மனிதாபிமானத்தோடு பன்முறைகேட்டும் இன்று வரையில் எவ்வித பயனுமில்லை தயவுசெய்து இனிமேலும் காலந்தாழ்த்தாது ஏழைமக்களினதும், தொழிலாளிகள் நன்மை கருதியும் மனமிரங்கித் தரும்படி மிகப் பணிவன்புடன் மீண்டுமொருமுறை கேட்டுக் கொள்கின்றோம்.

**நியூ லலிதா,**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
[C 2569]

## LANKA CEMENT LTD.

KANKESANTHURAI,

### POST of PILOT

Lanka cement

## இலங்கா சீமெந்து லிமிட்டெட்,

காங்கேசன்துறை

### பதவி – கப்பல் மாலுமி

இலங்கா சீமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல் மாலுமிக்கான வெற்றிடம் ஒன்று உடனடியாக நிரப்பப்படவுள்ளது விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப்பத்திரத்துடன் இலங்கா சீமெந்து லிமிட்டெட் உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்துக்கு ஆனி மாதம் ஆறும் திகதிக்குமுன் சமுகமளிக்கவும்.

மாலுமி தகைமைச் சான்றிதழும் (Master Certificate) சேவைச் சான்றிதழ்களும், 1000 மெற்றிக் தொன் முதல் 40 000 மெற்றிக் தொன் வரையிலான எடையுள்ள கப்பல்களைக் கட்டுவதற்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

பொது முகாமையாளர்,
இலங்காசீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

A 695

## வெளிநாட்டுப் பிரயாணம்

டென்மார்க் செல்ல விரும்புவர்களும் மத்தியகிழக்கில் சாரதிகளாக, பணிப்பெண்களாக பணியாற்ற விரும்புவர்களும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**மல்ரி சேவிசஸ்,**
37 (351), மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்தி),
யாழ்ப்பாணம்

[C2529]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 29-5-86

# இருநாள் அமைதியின் பின்

# யாழ்நகர் நேற்று அமர்க்களம்

## பெண்ணும் கணவனும் படுகாயம்; வீடுகள் சேதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டை முகாமிலிருந்து நேற்று மாலை யாழ். நகரிலுள்ள கொட்டடிப் பகுதியை நோக்கி அடுத்தடுத்து 'ஷெல்'கள் ஏவப்பட்டன.

வீடொன்றின் மீது ஷெல் விழுந்ததால் அவ்வீடு சேதமடைந்ததுடன் வீட்டிலிருந்த கணவனும் மனைவியும் படுகாய முற்றனர். வீட்டிலிருந்த காரும் சேதத்திற்குள்ளானது

கொட்டடி-பண்ணை வீதியைச் சேர்ந்த சோமசுந்தரமும் அவரது மனைவியுமே படுகாயமுற்றவர்கள். இவ்விருவரும் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

மேலும் பலர் சிறு சிறு காயங்களுக்குள்ளானார்கள் பல வீடுகளும் சிறுசேதமுற்றன.

நேற்று முன்தினம் இப்பகுதியில் எதுவித குண்டு, ஷெல் தாக்குதல் நிகழாததால் குடிபெயர்ந்திருந்த பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள நேற்றுக்காலை மீண்டும் தங்கள் வீடுகளுக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

நேற்றுமாலை திடீரெனக் கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே புறப்பட்ட பொழுது, போராளிகள் தரப்பிலிருந்து 'எச்சரிக்கை'க் குண்டுகள் வெடிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். போராளிகளும் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். இருமணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இருபகுதியினரும் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். இம்மோதலில் இராணுவத் தரப்பில் சேதமேற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

இடையிடையே 'ஷெல்'களும் ஏவப்பட்டன. வெளியே வரமுயன்ற இராணுவத்தினர் முகாமுக்குள் மீண்டும் சென்றுவிட்டதாகத் தெரிகிறது.

நேற்றிரவு இச்சம்பவத்தால் பதற்றமடைந்த மக்கள் மீண்டும் தங்கள் வீடுவாசல்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். [மா]

## நெடுந்தீவில் கரைஒதுங்கிய இளைஞரின் சடலம்

[நெடுந்தீவு]

25 வயது மதிக்கத்தக்க இனம் தெரியாத இளைஞரின் சடலமொன்று நெடுந்தீவு மேற்கு வெடிஅரசன் கோட்டைக்குச் சமீபமான கடற்கரையில் வந்து ஒதுங்கியுள்ளது.

இளைஞர் 'என்ஜின் ஒயில்' கறைபடிந்த சேட்டும் 'ஜட்டி'யும் அணிந்திருந்தார். 'ஜட்டி'ப் பையில் இராமேஸ்வரம் 'டீசன்ட் கிளாத் சென்டர்' என்ற கடையில் 7-05-86 ல் பொருள்கள் பெற்ற பற்றுச் சீட்டு ஒன்று காணப்பட்டது. மற்றொரு பற்றுச் சீட்டின் பின்பகுதியில் "டஞ்சவருணம் வழாநகரவை" என்றும் எழுதப்பட்டிருந்தது.

இம்மாதத்தில் நெடுந்தீவில் கரை ஒதுங்கிய மூன்றாவது சடலம் இதுவாகும்.

## விண்வெளி வீரரின் புதிய சாதனை

(மாஸ்கோ)

சோவியத்யூனியனைச் சேர்ந்த இரு விண்வெளிவீரர்கள் மூன்றுமணி நேரமாக விண்வெளியில் நடந்து சென்று புதியதோர் சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள்.

இவர்கள் நடந்து செல்லும் காட்சி சோவியத் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் இவ்விரு வீரர்களும் விண்வெளியில் பயணம் செய்து வருகிறார்கள். சோவியத் டி-15 விண்கலத்தின் மூலம் விண்வெளியை அடைந்த இவர்கள், சல்யூட்-7 விண்வெளிக் கலத்துக்கு மாற்றப்படுவதற்கு முன்னர் 7 வாரங்கள் வேறொரு விண்வெளிக் கூடத்திலிருந்து செயல்பட்டனர்.

ஒரு விண்வெளிக் கூடத்திலிருந்து இன்னொரு விண்வெளிக்கூடத்திற்கு விண்வெளி வீரர்கள் மாற்றப்பட்டதும் இதுவே முதல் தடவையாகும். (பி)

## 'ஹெலி, சுட்டு 'வான்' சேதம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு படுவான் கரை வீதியில் நேற்று நண்பகல் சென்றுகொண்டிருந்த வான் மீது ஹெலிகொப்டரிலிருந்து குண்டு வீசப்பட்டதால், வான் முற்றாகச்சேதமடைந்தது

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு முன்னதாகவே வானிலிருந்தவர்கள் பீதியடைந்து வானை விட்டு இறங்கித் தப்பிக் காட்டுக்குள் ஓடி ஒளித்துக்கொண்டனர். பின்னர் அதி உயரப் பறந்துகொண்டிருந்த ஹெலிகொப்டர் அவ்விடத்தில் தாழப் பறந்து அந்த வானை நோக்கிக் குண்டு ஒன்றைப் போட்டதால் வான் முற்றாகச் சேதமடைந்தது. [மா]

## மரண அறிவித்தல்

### திருமதி செ. இராசநாயகம்

உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி செ. இராசநாயகத்தின் அன்பு மனைவியும், சந்திரசேகரம், இரத்தினசிங்கம் (சட்டத்தரணி), திருமதி இராஜேந்திரசிங்கம் (அதிபர், உடுப்பிட்டி மகளிர்கல்லூரி), சுப்பிரமணியம் (நைஜீரியா), திருமதி சரஸ்வதிதேவி மகேந்திரராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், இரத்தினேஸ்வரி, செல்லம்மா, இராஜேந்திரசிங்கம், மகேந்திரராசா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-05-86 அன்று மூன்றுமணியளவில் உடுப்பிட்டியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது என்பதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகிறோம் தகவல்:

திருமதி பா. இராஜேந்திரசிங்கம்,
உடுப்பிட்டி.

(C 2559)

### திருமதி அருந்ததிநாயகி சின்னையா

காலஞ்சென்ற முன்னைநாள் அத்தியடி விதானையார் திரு. மு. சின்னையா அவர்களின் அன்பு மனைவி அருந்ததிநாயகி காலமாகிவிட்டார். இவர் அட்டமங்களலக்ஷ்மி, முருகதாஸ் (டோகா) ஆகியோரின் தாயாரும், சதிர்காமதாசனின் சிறியதாயாரும், சிவஞானசேகரம் (E T O. யாழ் மாநகரசபை), யோகநாயகி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற திரு, திருமதி V. M. வேலாயுதபிள்ளையின் புதல்வியும, காலஞ்சென்ற நீலாம்பிகை, தையல்நாயகி, வடிவேற்கரசு, V M V. குருநாதன், லோகநாதன் (லண்டன்), வைகுந்தநாதன் (இந்தியா), நல்லநாதன், அருமைநாதன், திருமதி பராசக்தி ஆகியோரின் சகோதரியும், சிவலக்ஷ்மி சிவலக்ஷமன், விஜயலக்ஷ்மி, மனோகரி (இந்தியா), சுதாகரன், பிரபாகரி, சசிகரி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-05-86) வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

17/2, அத்தியடி, யாழ்ப்பாணம். [C 2577]

### திரு. சோமசுந்தரம் சின்னத்துரை (பூபாலசிங்கம்)

கோண்டாவில் நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகாப் படவரைஞரும் (கிளிநொச்சி) ஆகிய சோ. சின்னத்துரை அவர்கள் காலமாகி விட்டார். அன்னார் திரு., திருமதி சோமசுந்தரத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு., திருமதி பேரம்பலத்தின் அன்பு மருமகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், மாதேவியின் அருமைத் தந்தையும், திரு கெ. கனகராசாவின் ("Rasa Hardwares", இருபாலை) அருமை மாமனாரும், காலஞ் சென்ற துரைவீரசிங்கம், இந்திரபூபதி, வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், மற்றும் திரு. பே ஸ்ரீதரன், திரு ஆ கந்தையா, திருமதி வே. தவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்ஸ்மன், ஜனனி, துவாரகன் ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கோண்டாவில் காரைக்காடு மயானத்தில் 29-5-86 இன்று காலை 11 மணியளவில் நடைபெறும்.

(C- 2581) தகவல்: கெ. கனகராசா.

## நாளை முதல் இந் நோயாளர் மருந்துபெற வசதி

(யாழ்ப்பாணம்)

பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் மருந்து பெற்று வந்த நோயாளர்கள் வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ். கச்சேரிக்கருகில் உள்ள கயரோக தடுப்பு நிலையத்தில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பண்ணை மார்புநோய் ஆஸ்பத்திரிக்கு நோயாளிகள் செல்ல முடியாதநிலை ஏற்பட்டிருப்பதால் தற்காலிகமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு மருந்து மாத்திரமே வழங்கப்படும். வைத்திய பரிசோதனைகள் செய்து கொள்ள விருப்புகின்றவர்கள் மார்பு நோய் நிபுணர் பருத்தித்துறைக்கு அல்லது தெல்லிப்பழைக்கு செல்லும் நாட்களில் அங்கு சென்று வைத்திய பரிசோதனைகளைச் செய்து கொள்ளலாம்.

## கணவன்மாரை மீட்டுத்தருமாறு 8 பெண்கள் முறையீடு

[திருகோணமலை]

அகதிகள் முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்ட 8 குடும்பஸ்தர்களையும் விடுவித்துத்தருமாறு அவர்களின் மனைவிமார் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்

இவர்கள் கடந்த 26 ம் திகதி கைது செய்யப்பட்டது தெரிந்ததே. [மா]

## வெளிநாட்டு—

(1ம் பககத் தொடர்ச்சி)

தக்கது.

வெளிநாட்டுத் தூதுவர்களுடனான இந்தச் சந்திப்பின் போது இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசு இந்தியாவிடம் கையளித்துள்ள புதியயோசனைகள் பற்றிய பிரதிகள் கையளிக்கப்படும்.

இதேவேளை இனப்பிரச்னைக் குறித்து மத்திய அரசுடன் கலந்துரையாடும் வகையில் இந்திய உயர் ஸ்தானிகர் திரு [illegible] க்கிழமை புதுடில்லி செல்லவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. [ய-ரா]

## தடைப்பட்டிருந்த..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

நாட்டு நிலமை சீராகும் வரை தற்காலிக தபாலகம் 2 ம் குறுக்குத் தெருவில் இயங்குமாம். [ஐ]

## திருமலை—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாக முல்லைத்தீவை வந்தடைந்தனர்

இவர்கள் முல்லைத்தீவுக்கு முழுமுனை அகதிகள் முகாமில் தங்கியிருக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத் தீவு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். [மா)

## கடை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்று பொது மக்களால் எரிக்கப்பட்டுள்ளது.

யாழ் நகரில் ஒரு குறிப்பிட்ட மக்கள் வசிக்கும் பகுதியில் இக் கடை உள்ளது [த]

## ஆயுதப்படையிடம்...

[1ம பக்கத் தொடர்ச்சி]

இந்த மூவரும் நேற்று முன்தினம் 85 ம் ஆண்டுக் கலவரத்தின்போது திருமலையில்பாதிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்களைப் பார்வையிட்டுப் படம் பிடித்ததுடன் திருமலைப் பிரஜைகள் குழுவையும் சந்தித்து உரையாடினர். இச் சமயத்திலேயே தேடுதல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த ஆயுதப் படையினர் இம் மூன்றுநிருபர்களையும் கைது செய்து விசாரணை செய்தனர். (மா)

## நடந்து செல்கின்றனர்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்- கைதடிப்பாலம் திருத்த வேலைகளுககுட்பட்டிருப்பதனால் கோப்பாய்ச் சந்தியிலிருந்து கைதடியிலமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைக்கு பட்டதாரி மாணவ மாணவிகளும் விரிவுரையாளர்களும் நடந்தே சென்று வருகின்றனர்.

பஸ்ஸில் கைதடி மருத்துவத்துறைக்குச் செல்வதாயின் அத்தூர் ஊடாகச் சாவகச்சேரிக்குச் சென்றே பின் கைதடிக்குச் செல்ல வேண்டும். [மா]

## பிரதி ஜெயிலர் கைது!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புச் சிறைச்சாலையின் பிரதி ஜெயிலர் எஸ். சிவதாஸ் அதிரடிப் பிரிவுப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக்காலை கடமையின் நிமித்தம சிறைச்சாலைக் கண்மையாகச் சென்றுகொண்டிருந்தபோது முகமூடியணிந்த ஒருவருடன் வந்த அதிரடிப் படையினர் அவரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

கடந்த 26ம் திகதி மட்டக்களப்பு படுவான்கரையில் கடமையிலிருந்தபோது கைது செய்யப்பட்ட இரு சுகாதாரப் பரிசோதகர்களும் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். [மா]

## தபால் கந்தோர் மே மாத ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்

தபால் கந்தோர் ஒய்வூதியத் திகதிகள பின்வருமாறு;

2-6-86 காவெட்டி, வல்வெட்டித்துறை, சங்கானை, கொடிகாமம்

3-6-86 யாழ்ப்பாணம், கைதடி.

4-6-86 கொக்குவில், வசாவிளான், மானிப்பாய், உரும்பராய்

5-6-86 தெல்லிப்பளை, கோப்பாய், பண்டத்தரிப்பு, வண்ணார்பண்ணை.

6-6-86 சுன்னாகம், நெடுந்தீவு, னலைதீவு, நயினாதீவு, வேலணை.

9-6-86 பருத்தித்துறை, காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை.

11-6-86 ஊர்காவற்றுறை, அச்சுவேலி, புங்குடுதீவு, சுழிபுரம்

12-6-86 அளவெட்டி, காரைநகர், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

யாழ். துரையப்பாவிளையாட்டரங்கில ஒய்வூதியம் வழங்கப்படும். (ஐ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org